<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் தேதி (11.02.2021) வியாழக்கிழமை பகல் 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. சி.கிருபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

<u>மன்றப்பொருள்.1.</u> தலைமை பொறியாளர் (முழு கூடுதல் பொறுப்பு), நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 21978–15/2020/பாசாதி–2 , நாள்.29.12.2020ல் நெல்லிக்குப்பம் நகராட்சியில் அமைக்கப்பட்டு வரும் 20 KLD கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் ( FSTP) செயல்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட கசடு கழிவு மேலாண்மை வரைவு உபவிதிகளுக்கு பொது அங்கீகாரம் ( General Approval) அளித்தற்கிணங்க , மேற்படி கசடு கழிவு மேலாண்மை வரைவு உபவிதிகளை ( தமிழ் மற்றும் ஆங்கிலம்) கடலூர் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும் , அதற்கு ஏற்படும் செலவினத்தொகையினை அரசு தலைப்பில் செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண் . 0103/2019/இ1)**

**தீர்மான எண் . 13. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.2.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு அத்திவாசிய சிறு சிறு பணிகள் மேற்கொள்ள அலுவலக முன் பணமாக ரூ.3000/– நகராட்சி பொறியாளருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0324/2021/இ1)**

**தீர்மான எண் . 14. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.3.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க..எண். 20557/2018/E3 நாள். 14.12.2020 ன் படி சிறப்பு சாலை திட்டம் (SRP ) 2020–21 ஆம் ஆண்டின் கீழ் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளை மேம்படுத்தும் பொருட்டு ரூ.200/–இலட்சம் மதிப்பீட்டிற்கு உள்ள பணிகளை ஒப்பந்தபுள்ளிக்காக 12.01.2021 அன்று மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தபுள்ளி செய்தி மலரிலும் விளம்பரம் செய்த வகையில் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புதுறை , சென்னை – 9 அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு Adwave Advertising (P) Ltd , No. 9 . South Boag Road . T. Nagar , சென்னை அவர்களுக்கு ரூ.17588/– பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2823 /2019/இ1)**

**தீர்மான எண் . 15. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.4.</u>** இந்நகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு. என். அரிக்குமார், என்பவர் பணி மாறுதலில் கடலூர் பெருநகராட்சிக்கு சென்றுவிட்டார், அவர் இந்நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை கடலூர் பெருநகராட்சிக்கு அனுப்ப கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி என். அரிக்குமார், உதவியாளர், கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1997–2021 முதல் சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 25.04.1997 |
| 2 | ஓய்வுபெறும் நாள் | 31.05.2021 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 136 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 8/2008 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2720/- |
| 6 | 25/04/1997 முதல் 31/01/2021 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.10213/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | – |
| | மொத்தம் | ரூ.12933/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு.என்.அரிக்குமார், உதவியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2720/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 10213/– ம் சேர்த்து மொத்தம் ரூ.12933 /– கடலூர் பெருநகராட்சிக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க. எண். 273/2021/பி2**

**தீர்மான எண் . 16. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.5.</u> இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. எம். கண்ணம்மாள், என்பவர் 31.01.2021 அன்று ஓய்வு பெற்றுள்ளார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திருமதி. எம். கண்ணம்மாள், துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1993–2021 வரை சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 24.03.1993 |
| 2 | ஓய்வுபெற்ற நாள் | 31.01.2021 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |

| | | |
|---|---|---|
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 06/2005 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 1993 முதல் 2021 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.20232/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ .10000/– |
| | **மொத்தம்** | ரூ.33192/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திருமதி. எம். கண்ணம்மாள், துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 20,232/– ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ. 10000/– சேர்த்து மொத்தம் ரூ.33,192/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 212/2021/பி2**

**தீர்மான எண் . 17. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.6.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஆணையர் அறையில் இயங்கி வந்த CCTV கேமராக்கள் நான்கு பழுதடைந்ததை சீர் செய்து மீண்டும் பொருத்த தோரய மதிப்பீடு ரூ.5000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . 1. மன்றம் அனுமதிக்கலாம் .

2. தனி அலவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண்:- 0659/2021/இ1**

**தீர்மான எண் . 18. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றப்பொருள்.7.</u> நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஆணையர் அறையில் இயங்கி வந்த CCTV கேமராக்கள் நான்கு பழுதடைந்ததை சீர் செய்து மீண்டும் பொருத்தும் பணிக்கு தனி அலுவலரின் 12.01.2021 முன் அனுமதியின் படி நகராட்சி வருவாய் நிதியின் கீழ் 18.01.2021ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல்

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|
| திரு . முகம்மது தாஜிதின் , நெல்லிக்குப்பம் | 4150/– |
| திரு . ரஹமான் , நெல்லிக்குப்பம் | 5680/– |
| A.R.G .Solution , கடலூர் மெயின் ரோடு , நெல்லிக்கப்பம் . | 5470/– |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.4150/–குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு . முகம்மது தாஜிதின் , நெல்லிக்குப்பம் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் . 0659/2021/இ1)**

**தீர்மான எண் . 19. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 005 நாள். 27.01.2021 ன்படி 09.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் விநியோகத்திற்கு Liquid Chlorine தருவித்து வழங்குதல் பணி . | 1.00 | Sai Tirupathi Trading Enterprises , Villupuram | **0.71%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | D.R . Scientific and Surgical , Puducherry. | **1.43%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.71%** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Sai Tirupathi Trading Enterprises , Villupuram ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 0339/2021/இ1)**

**தீர்மான எண் . 20. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.9.</u>** நகராட்சி பொது சுகாதாரம் ந.க.எண்.1030/2020/எச்1, நாள்.17.07.2020ன்படி, நகராட்சி கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக வார்டு பகுதிகளில் அடிப்பதற்கு தேவையான ஈகோ கிளீன் 50 பிளஸ் 200 லிட்டர் ஸ்ரீசக்தி ஏஜென்ஸி, ஈரோடு என்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தொற்று நோய்க்கானபொருட்கள் இருப்பு பதிவேடு பக்க எண்.105ல் பதிவு செய்யப்பட்டு கோட்டங்களுக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட பொருள் வாங்கப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.7,10,360/–வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 21. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.10.</u>** நகராட்சி பொது சுகாதாரம் ந.க.எண்.1030/2020/எச்1, நாள்.16.12.2020ன்படி, நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான 1. பிளீச்சிங் பவுடர்– 3டன், 2. நீர்த்த சுண்ணாம்பு – 7டன் மற்றும் 3. முககவசம் – 5000எண்ணிக்கை பெறப்பட்டு கொரோனா நோய் தடுப்பு பணிக்களுக்கான பொருட்கள் இருப்பு பதிவேடு பக்க எண்.33, 74 மற்றும் 121ல் பதிவு செய்யப்பட்டு கோட்டங்களுக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட பொருட்கள் வாங்கப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.3,21,570/– வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.1030/2020/எச்1

**தீர்மான எண் . 22. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN31 AH 6556க்கு 12v 13 Plate Battery வாங்க பெற்று மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால், பயன்படுத்த முடியாத நிலை உள்ளதினால், புதியதாக பேட்டரி–1 எண்ணிக்கை வாங்கி வழங்கிட அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5000/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம்.

**ந.க.எண்.0289/2021/எச்1**

**தீர்மான எண் . 23. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.12.</u>** 21.01.2021 ல் விலைப்புள்ளி கோரியதில், டாட்டா ஏசி வாகனத்தில் உள்ள பேட்டரி பழுதாகி உள்ளதால், புதிய பேட்டரி வாங்கி பொருத்திட கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. விபரம் பின்வருமாறு

| வ.எண். | விலைப்புள்ளிதாரர்களின் பெயர் | ஒன்றின் விலை |
|---|---|---|
| 1 | ஸ்ரீசாய்ராம் பேட்டரி,<br>36B, கும்பகோணம் மெயின் ரோடு,<br>பண்ருட்டி. | ரூ.3,800/– |
| 2 | M/s KB பேட்டரி சென்டர்,<br>பி.என்.பாளையம், கடலூர் மெயின் ரோடு,<br>மேல்பட்டாம்பாக்கம். | ரூ.3,900/– |
| 3 | M/s ஸ்ரீ துர்கா பேட்டரி ஒர்க்ஸ்,<br>மாளிகைமேடு, பண்ருட்டி. | ரூ.4,000/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்டுள்ள ஸ்ரீசாய்ராம் பேட்டரி, பண்ருட்டி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி மற்ற இரண்டு நிறுவனங்களை விட விலை குறைவாக இருப்பதினால், அந்நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1768/2020/எச்1**

**தீர்மான எண் . 24. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.13.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியின் 2021 – 24 ஆம் ஆண்டுக்கான மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 10.02.2021 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டதில் , நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தினுள் உள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தின் உரிமத்திற்கு மட்டும் கீழ் கண்ட நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டு ஏலக் கேள்வி எழுப்பியதை மன்றத்தின் பார்வைக்கும் , முடிவுக்கும் வைக்கப்படுகிறது .

| வ.எண் | பொது ஏலம் கோரியவரின் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1 | திரு . ஜெ . சோமசுந்தரம்<br>68 , அண்ணா நகர்<br>நெல்லிக்குப்பம் | இல்லை |
| 2 | திருமதி . எஸ் . புவனேஸ்வரி ,<br>ஒப்பந்ததாரர் ,<br>நெல்லிக்குப்பம் | ரூ.56100/– |
| 3 | திருமதி . எஸ் . பரிமளா , நகராட்சி ஒப்பந்ததாரர் ,<br>க/பெ. சுவாமி நாதன் , மோரை எவரெட்டபுரம்<br>நெல்லிக்குப்பம் | ரூ.56200/– |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1வரிசை எண். 3ல் குறிப்பிட்டுள்ள ஏலதாரர் திருமதி . எஸ் . பரிமளா , நகராட்சி ஒப்பந்ததாரர் , க/பெ. சுவாமி நாதன் , மோரை எவரெட்டபுரம் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்ட தொகையினை மன்றம் அனுமதிக்கலாம் .

2. கடந்த 2018–19ம் நிதியாண்டில் வரப்பெற்ற உயர்ந்த பட்ச ஏலத் தொகையின் ரு.46000/–ஐ விட கூடுதலாக தற்பொழுது உயர்ந்த பட்ச கேள்வி தொகை உள்ளதால் மன்றம் இதனை அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 3169/2020/இ1)**

**தீர்மான எண் . 25. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.14.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினசரி காலை, மாலை இரண்டு வேலைகள் 13 மேல் நிலை தண்ணீர் தொட்டி மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு தினசரி விநியோகம் செய்யப்படுகிறது . தற்சமயம் குடிநீர் பிரிவில் மேல் நிலை தண்ணீர் தொட்டி காவலர்கள் 5 நபர்கள் மட்டும் உள்ளனர் . 5நபர்களை வைத்துக் கொண்டு அனைத்து மேல் நிலை தண்ணீர் தொட்டிகளையும் இயக்க முடியவில்லை . மேலும் மின் தடை காலங்களில் ஆழ் குழாய் கிணறு மோட்டார் பம்புகளையும் இயக்குவதில் மிகவும் சிரமமாக உள்ளது . இதனால் குடிநீர் விநியோகம் சில நேரங்களில் தடைபடுகின்றது . எனவே குடிநீர் விநியோகத்தை தடைபடாமல் கொடுக்கவும் , பொது மக்கள் நலன் கருதியும் , பொது சுகாதார பிரிவில் தனியார் மூலம் துப்புரவு பணி செய்ய நபர் ஒருவருக்கு ரூ.387.90 வீதம் வழங்கப்பட்டு வருகிறது . (மன்ற தீர்மான எண். 234 நாள் . 01.11.2017) மேலும் பொறியியல் பிரிவில் குடிநீர் குழாய் மின் மோட்டார் பழுது பார்க்கும் பணி திரு. ராம்குமார் , ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது . ந.க.எண் . 2095/2020/E1. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று பணி செய்ய கால தாமதம் ஏற்படும் என்பதால் பொது மக்களின் அத்திய அவசியமான குடிநீர் சீரான விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால் 6 மாத காலத்திற்கு தற்காலிகமாக திரு. ராம்குமார் அவர்களிடம் தேவைக்கு ஏற்ற நபர்கள் அனுப்ப 6 மாத காலத்திற்கு பணிபுரியும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.220000/– ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

**ந.க.எண்:- 0658/2021/E1**

**தீர்மான எண் . 26. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.15.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அம்மா உணவகம் கட்டிடத்தின் வெளிப்புற சுவரில் நகரில் உள்ள அரசியல் கட்சி காரர்கள் அரசியல் விளம்பரம் செய்து வருகின்றனர் . இதனை பலமுறை தடுத்தும் அரசியல் கட்சிகாரர்கள் விளம்பரம் செய்வதையும் , சுவரெட்டி ஒட்டுவதையும் நிறுத்தவில்லை . இதனால் பொது மக்கள் மூலம் பல புகார்கள் வந்த வண்ணம் உள்ளது . தற்சமயம் “ சட்ட மன்ற தேர்தல் ‘‘ வருவதால் மேற்படி சுவரில் அரசியல் கட்சிகள் சுவர் விளம்பரம் செய்யாமல் இருக்க “ஸ்ரெக்கோ பிளாஸ்டரின்’’ செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ . 18600/– க்கும் செலவை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் பணியை ஒப்படைப்பு பணியாக இந்நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திருமதி . S . பரிமளா மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம் .

**<u>ந.க.எண். 0814 /2021/இ1</u>**

**தீர்மான எண் . 27. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றப்பொருள்.16.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN31 AH 1415 என்ற வண்டி பழுது அடைந்துள்ளதால் , அதனை சீர் செய்து கொள்ள உத்தேச செலவினம் ரூ.45000/– ஆகும் . இத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>ந.க.எண். 0406 /2021/இ1</u>**

**தீர்மான எண் . 28. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி